## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## IDOP No. 44 /2020 RW1

11.09.2024 **எ.சா.1 திரு. ஜாக்குலின் ஜான்சிராணி சத்திய வாக்குமூலத்தின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

எனது நிருபண வாக்குமூலம் 3ம் பத்தியில் திருமணத்திற்கு பின்பு என் பெற்றோர் என்னை செவிலியர் படிப்பு மற்றும் பி.எட் படிப்பும் படிக்க வைத்தார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். செவிலியர் படிப்பை நான் என் திருமணத்திற்கு முன்பே முடித்து விட்டேன் என்றால் சரிதான். செவிலியர் படிப்பை மட்டும் தான் என் பெற்றோர் படிக்க வைத்தார்கள் என்றால் சரியல்ல. பி.எட் படிப்பு படித்த வருடம் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. என்னை பி.எட் படிக்கவைக்க எனது நகைகளை எனது கணவர் கலெக்டர் ஆபிஸ் ரோடு எஸ்.பி.ஐ. பேங்கில் அடகு வைத்தார் என்றும் பின்னிட்டு அவரது சம்பளத்தை வைத்து அந்த நகையை மீட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது ஆவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை செவிலியராக பணிபுரிகிறேன். மனுதாரரின் மிலிட்டரி கோட்டாவில் தான் மேற்படி வேலை எனக்கு கிடைத்தது என்றால் சரியல்ல. என்னை பி.எட் படிப்பு படிக்க வைத்ததற்கும், வேலை வாங்கித் தருவதற்கும் எனது பெற்றோர்கள் தான் செலவு செய்தார்கள் என்பதைக் காட்ட ஆவணங்கள் ஏதும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் என்னிடம் ஆதாரம் உள்ளது. 2005ல் நானும் என் கணவரும் சேர்ந்து வேட்டவலத்தில் ஒரு வீடும், ஒரு காலி இடமும் வாங்கினோம் என்றால் எனது கணவர் வாங்கவில்லை, எனது பெற்றோர் வாங்கிக் கொடுத்தார்கள். எனது 3 குழந்தைகளையும், வேட்டவலம், நங்காத்தூர் மற்றும் அனந்தபுறத்தில் படிக்க வைத்தோம். நங்காத்தூரில் எனது முதல் மகள் 7ம் வகுப்பு மட்டும் படித்தார், வருடம் நியாபகம் இல்லை. ஆனால் 1 முதல் 6ம் வகுப்பு வரை வேட்டவலத்தில் எனது முதல் மகள் படித்தார். 8ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை எனது மூத்தமகள் வேட்டவலத்தில் படித்தார். 2ம் குழந்தை 1 முதல் 4ம் வகுப்பு வரை வேட்டவலத்தில் படித்தார், 5ம் வகுப்பு நங்காத்தூரில் படித்தார். பிறகு 6 முதல் 12 வகுப்பு வரை வேட்டவலத்தில் படித்தார். 3வது குழந்தை 1ம் வகுப்பு அனந்தபுறத்தில் படித்தார், 2 முதல் தற்போது 10ம் வகுப்பு வரை வேட்டவலத்தில் படித்து வருகிறார். எனது கணவர் மிலிட்டரியில் வேலை செய்தவர். 3 குழந்தைகளையும் நான் தான் பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். 3 குழந்தைகளும் நான் சொல்வது போல் நங்காத்துரில் ஒரு வருடம் கூட படிக்கவில்லை என்றும், 3 மாதத்திலேயே நான் அவர்களது

டி.சி.யை வாங்கி வேட்டவலத்திற்கு அழைத்து சென்று விட்டேன் என்றால் என்னை அடித்து, உதைத்து, கொலை செய்து விடுவதாக மிரட்டியதால் நான் நங்காத்தூரில் இருந்து வேட்டவலம் சென்று விட்டேன். மீண்டும் நங்காத்தூர் வந்த போது வீட்டின் கதவை பூட்டிக் கொண்டு சாவியை அவர் தம்பி வைத்து கொண்டு என்னை துரத்தி விட்டார்கள். என்னை அடித்து, உதைத்து, கொலை முயற்சி செய்த தேதி, நேரம், கிழமை போன்றவற்றை சொல்லி போலீசில் புகார் கொடுத்துள்ளேன். ஆனால் புகார் மற்றும் புகாருக்குண்டான ரசீதை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரரின் தாயார் 2013ல் இறந்து விட்டார். அவரது வயதான தாயாரை அவரது வயோதிக காலத்தில் அவருடன் இருந்து பராமரித்தும் மருத்துவ மனையில் இருந்த போது அவரை கவனித்தும், அவரது இறுதி காலத்தில் நல்ல முறையில் கவனித்து இறந்த போது எல்லா சடங்குகளையும் முன்நின்று சிறப்பாக நடத்தினேன் என்று என் நிருபண வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வேட்டவலத்தில் இருந்த நான் எப்படி நங்காத்தூரில் இருந்து என் மாமியாருக்கு மேற்சொன்ன காரியங்களை செய்ய முடியும் என்று கேட்டால் என் கணவரின் தம்பியும் அவரது மனைவியும் கோவையில் வேலை செய்ததால் என் மாமியார் வேட்டவலத்தில் என்னுடன் இருந்து வந்தார். என்னுடன் என் மாமியார் இருந்த காலத்தில் மேற்சொன்ன கடமைகளை நான் செய்தேன். நான் சொல்வது போல் என் மாமியார் வேட்டவலத்தில் தொடர்ந்து என்னுடன் தங்கவில்லை என்றும், ஒரே ஒரு முறை என்னுடன் வந்து 10 நாட்கள் மட்டும் தங்கினார் என்றும், அந்த சமயத்தில் நான் என் மாமியாருடன் சண்டை செய்து துரத்தி விட்டேன் என்றால் சரியல்ல. எனது வயதான மாமியாருக்கு சுகர் காரணமாக காலில் புண் வந்த காரணத்தினால் அதனால் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என கருதி நான் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வேட்டவலம் சென்று விட்டேன் என்றால் சரியல்ல. என் கணவர் என்னை குடித்து விட்டு அடித்த காரணத்தினால் என் மாமியாரே என்னை வேட்டவலத்தில் சென்று தங்க சொல்லிவிட்டார். என் கணவர், என் மாமியார் ஆகிய இருவரும் நான் கர்பமாக இருந்ததால் என்னை வேட்டவலத்தில் கொண்டு வந்து விட்டு விட்டார்கள். எனது நிருபண வாக்குமூலத்தில் யார் யாருடன் நங்காத்தூரில் என் கணவர் தவறான பழக்கம் வைத்திருந்தார் என்று குறிப்பிட்டு பெயரை சொல்லவில்லை என்றால் சரிதான். 2014ம் ஆண்டு அவ்வாறு என் கணவர் தவறான பழக்கங்களுடன் வாழ்ந்து வந்தார். என்னுடைய நிருபண வாக்குமூலத்தின் 5ம் பத்தியில் வேட்டவலத்தில் குடிபுகுந்தோம் என்று சொல்லியுள்ளேன் ஆனால் எந்த வருடம் குடிவந்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வேட்டவலத்தில் வீடு

எந்த வருடம் கட்டினோம் என என் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வேட்டவலத்தில் எந்த ஆண்டு வீடு கட்டப்பட்டது என்றால் 2009ம் ஆண்டு கட்டப்பட்டது. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.